DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. எம்,சி 12/2018

Prosecution Witness 1-பேபி க/பெ மாரியப்பசெட்டியார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of December 2024.

(Petitioner present. Respondent Absen. Petition u/s 126 (2) Crpc filed and allowe. Both side advocates present.)

<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. தற்சமயம் நான் பொள்ளாச்சியில் வசித்துவருகிறேன் என்றால் சரிதான். நான் தற்போது என் மகன் முருகேசனுடன் தான் வசித்துவருகிறேன் எனற்ால் சாதான். நான் பொள்ளாச்சிக்கு குடிவந்து 10 வருடங்கள் ஆகிறது. என் மகன் பொள்ளாச்சி சந்தையில் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். என் மகனுக்கு அவரதுவியாபாரத்தில் நான் உதவியாக இருந்துவருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வியாபாரத்தில் நிறைய வருமானம் கிடைக்கிறது என்றாலும் அதை நானும் என் மகனும் பங்கிட்டுக்கொள்கிறோம் என்றால் சரியல்ல.

2. என் கணவருக்கு தற்போது இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் சிகிச்சையின் போது நான் அவருடன் இருந்து அவரை கவனித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். என் கணவர் என்னையும் என் மகனையும் பராமரிக்கவில்லை எங்களுடன் இருக்கவில்லை. என் மகனுக்கு தற்போது 45 வயதாகிறது. என் கணவரின் சிகிச்சையின் போது அவரை கவனித்துக்கொள்ளவேண்டிய இடத்திலிருந்தும் அவரை கவனிக்காமல் நானும் என் மகனும் விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. என் கணவர் 33 வருடங்களுக்கு முன்பே வேறு பெண்ணை திருமணம் செய்துகொண்டு எங்களை பிரிந்து சென்றுவிட்டார். நாங்கள் இருவரும் உழைத்தால் தான் உணவு சாப்பிட இயலும்.

3. மேற்படி சங்கதியை நான் மனுவில் மற்றும் பிரமாண பத்திரிக்கையில் கூறவில்லை என்றால் சரிதான். என கணவர் மளிகைகடை நடத்தவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் வயது மூப்பின் காரணத்தினாலும பல வருடங்கள் முன்பே மேற்படி மளிகைக்கடையை மூடிவிட்டார் என்றாலும் தற்போது அவர் மளிகைக்கடை எதுவும் நடத்தவில்லை என்றால்

சரியல்ல. என் கணவர் தினமும் ஊருக்குள் சென்று மளிகைபொருட்களை

எம்,சி 12/2018

விற்று வருமானம் ஈட்டிவருகிறார். என் கணவருக்கு எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் இதய அறுவை சிகிச்சைக்கு பிறகு மருந்து மாத்திரைகள் எடுத்துவருகிறார் என்றால் என் கணவர் என்னுடன் இல்லை.

4. கடந்த 2003 ம் வருடம் சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் என் கணவருடன் சேர்ந்த வாழ்வதற்கு மனுதாக்கல் செய்துள்ளேன். என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ரூபாய் 3000/- என் கணவர் எனக்கு தரும்படி 2007 ம் வருடம் உத்தரவானது என்றால் சரிதான் ஆனால் என் கணவர் இதுவரை எந்த ஜீவனாம்ச தொகையும் கொடுக்கவில்லை. 2007 ம் வருடம் முதல் 2018 ம் வருடம் வரை என் கணவர் எனக்கு ஜீவனாம்ச தொகை கொடு்துதுவந்ததால் தான் அதுவரை நான் ஜீவனாம்ச வழக்கு தொடரவில்லை என்றால் சரியல்ல. 2018 ம் வருடம் என் கணவருக்கு இதய அறுவை சிகிச்சை நடந்நததால் அவரால் எந்த வியபாரமும் செய்ய இயலாமல் வருமானம் இல்லாமல் இருந்ததால் அதன் பிறகு அவரால் எனக்க ஜீவனாம்ச தொகை தர இயலவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு நிறைய சொத்துக்கள் மற்றும் வருமானம் உள்ளன.

5. 2018 ம் வருடம் என் கணவர் தன்னுடன் சேர்ந்துவாழ கூறி ஈரோடு மாவட்டம் குமாரபாளைத்தில் உள்ள அவரது வீட்டிற்கு என்னை அழைத்தார் என்றாலும் அதற்கு நான் மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. ஒரு இந்து மனைவி என்ற முறையில் என் கணவருக்கு ஆற்றவேண்டிய கடமைகளை நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் என்னை பிரிந்து சென்றுவிட்டார். என் மாமியார் பெயர் பழனியம்மாள் ஆகும். என் மாமனார் பெயர் ஆறுமுக செட்டியார் ஆகும். என் மாமியார் என் கணவரின் குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்தபோது என் கணவருக்கு வந்த பங்கை என் மகன் முருகேசன் பெயரில் எழுதிவைக்கச்சொன்னார் என்றால் சரிய்ல்ல. என் கணவர் பெயரில்தான் எழுதிவைத்தார்.

6. அவ்வாறு நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் என் மகன் முருகேசன் பெயரில் நிலம் கொடுத்ததற்கு ஆவணம் உள்ளது என்றால் சரியல்ல. என் கணவரின் உடன்பிறந்த சகோதரி பெயர் லட்சுமிஅம்மாள் என்றால் சரிதான். மேற்படி லட்சுமிஅம்மாள் தனக்கு வந்த பாகத்தை தன் அண்ணனும் என் கணவருமான மாரியப்ப செட்டியாருக்க கொடுத்துவிடலாம் என்று கூறியபோது என் கணவர்

மேற்படி வீட்டை என் பெயரில் எழுதிக்கொடுத்துவிடலாம் என்று கூறினார்

எம்,சி 12/2018

என்றாலும் அதன்படியே மேற்படி வீடு எனக்கு சேர்ந்தது என்றாலும் சரியல்ல. என் தாயார் வீட்டிலிருந்து எனக்குகொடுத்த பணத்தை வைத்து மேற்படி வீட்டை லட்சுமியம்மாளிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். அவ்வாறு நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் என் கணவர் சுயசம்பாத்தியம் ஆக பெற்ற வீட்டை என் பெயரில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

7. என் கணவர் வயதான காலத்திலும் மளிகைக்கடை வைத்து நடத்தி அதில் கிடைத்த வருமானத்தை எனக்கும் என் மகனுக்கு கொடுத்துவந்தார் என்றாலும் மேலும் எங்களுக்கு வேண்டிய சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு சொத்துகளை பெற்றுக்கொண்டு என் மாமியார் இறந்தபோது அவரது இறப்பிற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான்.

8. 2016 ம் ஆண்டு ஒரு சந்திரன் என்பவருக்கு என் கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த வீட்டை விற்று ரூபாய் 10,25,000/- பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான் ஆனால் மேற்படி வீடு நானும் என் கணவரும் சேர்ந்து உழைத்து சம்பாதித்தது ஆகும். அன்றை காலகட்டத்தில் மேற்படி வீட்டின் சந்தை மதிப்பு ரூபாய் 25 லட்சம் என்றாலும் ஆவணத்திற்காக அதன் மதிப்பு ரூபாய் 10,25,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. என்கணவர் எந்த வருமானமும் இன்றி உடல்நலக்குறைவுடனும் வயது மூப்புடனும் தற்போது இருப்பதால் எனக்கு ஜீவனாம்சம் தர இயலாத சூழ்நிலையில் இருக்கிறார் என்றால் சரியல்ல.

9. கடந்த தீபாவளி அன்று குமாரபாளையம் சென்று என் கணவரை சந்தித்து நோன்புக்காக பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. என் தாயார் வீடு பவானியில் உள்ளதால் அங்கு செல்வேன். என் கணவர் ஒவ்வோரு மாதமும் அமாவாசை அன்று மாசாணியம்மன் கோவிலுக்கு வருவார் என்றாலும் அப்போது என் மகனையும் என்னையும் பார்த்துச்செல்வார் என்றால் சரியல்ல. அவரது தங்கை வீட்டிற்கு வருவார். என் கணவருக்கு ரூபாய் 20 கோடிக்கு சொத்து உள்ளது என்று நான் கூறியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

10.என் மகன் முருகேசனுக்கு அவர் வியாபாரத்தின் மூலம் மாதம் 1 லட்சம் கிடைக்கிறது என்றாலும் அவருக்கு உதவியாக நான் இருப்பதாலும் எனக்கு ஜீவனாம்சம் பெற இயலாது என்றாலும் சரியல்ல. என்கணவர் என்னை தன்னுடன்

சேர்ந்து வாழ்வதற்கு அழைத்தார் என்றாலும் அதற்கு நான் மறுத்துவிட்டேன்

எம்,சி 12/2018

என்றாலும் சரியல்ல. எனவே இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

S/d. M.A. Suvedharanyan
Judicial Magistrate No.I,
Pollachi.